

## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.3502 கோடி வங்கிக்கடன் இணைப்பு!

# மகளிரின் தொழில், மாணவர்களின் கல்வி முன்னேற்றம் என்று பார்த்துப் பார்த்து முதலமைச்சர் திட்டங்களை நிறைவேற்றுகிறார்!

### சேலத்தில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக்குழு விழாவில் –

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சேலம்,செப்.18–

**சேலத்தில் நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு தமிழ்நாடு முழுவதும் மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த மகளிருக்கு ரூ.3502 கோடி அளவுக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் அடையாள அட்டைகளை வழங்கினார்.**

**அப்போது அவர், ``திராவிட மாடல் அரசு சார்பில், இன்றைக்கு வங்கிக்கடன் இணைப்புகளைப் பெற்றுள்ள 4 லட்சத்துக்கும் அதிகமான சகோதரிகளுக்கும், அடையாள அட்டைகள் பெற்றவர்களுக்கும் என்னுடைய அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இன்றைக்கு உங்களையெல்லாம் சந்தித்து, நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு முழுவதும் 3,502 கோடி ரூபாய் அளவில் வங்கிக் கடன் இணைப்பையும், மகளிர் சுயஉதவிக்குழு சகோதரிகளுக்கு கிட்டத்தட்ட ஒரு லட்சம் அடையாள அட்டைகளையும், இந்நிகழ்ச்சியில் வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.

### எழுச்சி – மகிழ்ச்சி

இங்கே நடப்பது அரசு விழாவா அல்லது மகளிர் மாநாடா என்று சந்தேகம் ஏற்படும் அளவுக்கு எழுச்சியோடும் மகிழ்ச்சியோடும் என் அக்காக்களும், தங்கைகளும், அம்மாக்களும், பாட்டிகளும் இங்கு வந்துள்ளீர்கள். இந்த நிகழ்ச்சிக்கு இன்னொரு சிறப்பு, இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் இருவரும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களோ அல்லது நம் கூட்டணிக் கட்சி உறுப்பினர்களோ அல்ல. சேலம் மேற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அருள் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் சதாசிவம் அவர்களும் வந்தது மட்டுமல்ல, இந்த சேலம் மாவட்டத்துக்கு பல்வேறு திட்டங்களை, நம் அரசு செய்து கொண்டிருக்கிறது, அதற்கு நன்றி என இருவரும் போட்டி போட்டுக்கொண்டு பாராட்டி இருக்கிறார்கள். ஆனால், ஒற்றுமையாகப் பாராட்டி இருக்கிறார்கள். எப்பொழுதுமே இதே ஒற்றுமையோடு அவர்கள் இருக்க வேண்டும், சிறப்பாக மக்கள் பணியாற்ற வேண்டும் என்று உங்கள் சார்பாக அவர்களை கேட்டுக்கொள்கின்றேன்.

அண்ணன் அருள் அவர்கள் பேசும்போது, ``நான்கு வீரர்களுக்கு மட்டும் நான் ஊக்கத் தொகை கொடுக்கச் சொன்னேன். அதை கொடுத்துவிட்டார். அதற்கு நன்றி”என்று கூறினார். இன்னும் பல திட்டங்களை விளையாட்டுத்துறைக்கு, நம் முதலமைச்சர் அவர்கள் இந்த சேலம் மாவட்டத்துக்கு தந்துள்ளார். குறிப்பாக, சேலம் மேற்குத் தொகுதியில், ஒரு மல்டி பர்பஸ் ஸ்போர்ட்ஸ் காம்ப்ளக்ஸ், ஒரு விளையாட்டு தங்கும் விடுதி, ஒரு சிந்தெடிக் அத்லெடிக் டர்ப் உள்ளிட்ட கிட்டத்தட்ட 35 கோடி ரூபாய் மதிப்பில் வசதிகளை, திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்துள்ளார்.

அண்ணன் அருள் அவர்கள் பேசும்பொழுது, வேறு சில கோரிக்கைகளையும் அரசுக்கு வைத்தார். நிச்சயமாக, முதலமைச்சரின் கவனத்துக்கு அதை எடுத்துச் சென்று, செய்து கொடுக்கின்ற பணிகளில் ஈடுபடுவேன் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### கலைஞர் போட்ட விதை

தமிழ்நாட்டின் பெண்கள் முன்னேற்றத்துக்கும் 1989 ஆம் ஆண்டுக்கும் முக்கியமான வரலாறு உள்ளது. 1989 ஆம் ஆண்டுதான் தர்மபுரியில் நம் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஆரம்பித்தார். அன்றைக்கு கலைஞர் அவர்கள் போட்ட விதை தான், இன்றைக்கு மிகப்பெரிய ஆலமரமாக, கிட்டத்தட்ட ஐந்து லட்சம் குழுக்களாக தமிழ்நாடு முழுக்க பரவி இருக்கிறது.

நான் சுற்றுப்பயணமாக கட்சி நிகழ்ச்சி, அரசு நிகழ்ச்சிக்கு தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்துக்குச் சென்றாலும், முதலமைச்சரின் உத்தரவின் பெயரில் அந்த ஊரில் இருக்கக்கூடிய சிறப்பாகச் செயல்படக்கூடிய சுயஉதவிக் குழு சகோதரிகளைச் சந்தித்து அவர்களோடு உரையாடி, அவர்களின் பிரச்சினை என்ன? அவர்கள் தொழில் எப்படி போய்க்கொண்டு இருக்கிறது, என்ன தொழில் செய்கிறார்கள் என்பதை கேட்டறிந்து வருகிறேன்.




### அடையாள அட்டை

சமீபத்தில் கலைஞரின் திருவாரூர் மாவட்டத்துக்கு ஒரு ஐந்து மாதங்களுக்கு முன்பு சென்றிருந்தேன். அப்போது அவர்களுடன் பேசிக் கொண்டு இருந்தேன். அங்கு வந்திருந்த குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளில் ஒருவர் எழுந்து, எல்லோருக்கும் அடையாள அட்டை கொடுக்கிறீர்கள். கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கு அடையாள அட்டை இருக்கிறது. பல்வேறு திட்டங்களுக்கு அடையாள அட்டை கொடுக்கிறீர்கள். எங்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு மட்டும் அடையாள அட்டை இல்லை என்று ஒரு கோரிக்கை வைத்தார்கள்.

நான் உடனடியாக, அதை முதலமைச்சரிடம் சொன்னேன். மகளிர் சுயஉதவிக் குழுச் சகோதரிகள் அடையாள அட்டை எதிர்பார்க்கிறார்கள் என்று சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அரசு



> மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு முதன்முறையாக அடையாள அட்டைகளையும் நம் அரசு கொடுத்திருக்கின்றது. கலைஞர் பிறந்த திருவாரூர் மாவட்டத்தில் வைக்கப்பட்ட கோரிக்கை, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

அதிகாரிகளையெல்லாம் வரவழைத்து, அவர்களுக்கும் அடையாள அட்டை வழங்க முடிவெடுத்தார். அதைப்பற்றிய அறிவிப்பை, மகளிர் தினமான மார்ச் 8–ஆம் தேதி வெளியிட்டார்கள்.

இன்றைக்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு நாள். எப்படி மகளிர் சுயஉதவிக் குழுவை இந்தியாவிலேயே முதன்முறையாக நம் தமிழ்நாடு தான் ஆரம்பித்ததோ, அதுபோல, இன்றைக்கு மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு முதன்முறையாக அடையாள அட்டைகளையும் நம் அரசு கொடுத்திருக்கின்றது. கலைஞர் பிறந்த திருவாரூர் மாவட்டத்தில் வைக்கப்பட்ட கோரிக்கை, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

### 100 கி.மீக்கு கட்டணம் இல்லை

இந்த அடையாள அட்டைகளை நீங்கள் பத்திரமாகப் பராமரிக்க வேண்டும். நிச்சயமாகச் செய்வீர்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால், அந்த அடையாள அட்டைகளின் மூலமாகப் பல பயன்கள் கிடைக்க இருக்கின்றன. இனி, உங்களின் தயாரிப்புகளை அரசுப் பேருந்துகளில் 100 கிலோமீட்டர் வரை கட்டணம் இல்லாமல் எடுத்துச் செல்லலாம். இதனால், உங்களுக்கு பொருட்களின் பயணக் கட்டணம் மிச்சம் ஆகும். அதனால், லாபமும் அதிகமாகும்.

இந்த அடையாள அட்டைகளின் மூலமாக ஆவின், கோ–ஆப்டெக்ஸ், முதல்வர் மருந்தகம் என்று பல இடங்களில் பிரத்தியேக சலுகைகள் பெறலாம். இதையெல்லாம் நீங்கள் தெரிந்து கொண்டு, பயன்படுத்த வேண்டும். ஒரு திட்டத்தை எவ்வளவு அதிகமாக பயன்படுத்துகிறோமோ, அதுதான் அந்த திட்டத்தின் வெற்றி. இந்த அடையாள அட்டைகள் உங்களுக்கு இன்று முதல் ஒரு புதிய அடையாளத்தைக் கொடுக்கப் போகிறது என்பதில் எனக்கு மாற்றுக்கருத்தே இல்லை.

இன்றைக்கு சுயஉதவிக் குழுக்கள் கோடிக்கணக்கான பெண்களுக்கு பொருளாதார சுதந்திரத்தைக் கொடுத்து வருகிறது. ஆண்களுக்கு நிகராக இல்லை, ஆண்களை விட அதிகமாக எங்களால் குடும்பத்தைப் பார்த்துக்கொள்ள முடியும், பிள்ளைகளைக் காப்பாற்ற முடியும், படிக்க வைக்க முடியும் என்று, நீங்கள் ஒவ்வொருவரும் ஆண்களுக்கு எடுத்துக்காட்டாக, வைராக்கியமாக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். அதைப் பார்க்கும்போது, எங்களுக்கெல்லாம் பொறாமையாவும், உத்வேகமாகவும் இருக்கிறது.

### பெரிய வெற்றிப் பயணம்

அப்படி, இந்த சேலம் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுகின்ற சில குழுக்களைப் பற்றி மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சேலம் அழகாபுரம் பகுதியைச் சேர்ந்த, `முழுமதி' மகளிர் சுயஉதவிக் குழு சகோதரிகள் இங்கு வந்திருக்கிறீர்கள். தொடக்கத்தில் உங்களின் தேவைகளுக்காக குழுவில் கடன் வாங்கி, முறையாகக் கட்டிகொண்டு இருந்தீர்கள். இன்றைக்கு சொந்தமாக ப்ராசஸ் ஃபுட் பேக்கிங் கம்பெனி நடத்திக்கொண்டு இருக்கிறீர்கள். அவர்களின் இந்தத் தொழில் பயணம் மிகப்பெரிய வெற்றிப் பயணமாக அமைய, நாம் அனைவரும் நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

இங்கு இருக்கக்கூடிய நாழிக்கல்பட்டி கலைமகள் மகளிர் குழுவை நாம் நிச்சயமான அனைவரும் பாராட்டியாக வேண்டும். ஏனென்றால், இந்தக் குழு முழுவதும் மாற்றுத்திறனாளி சகோதரிகளுக்கான குழுவாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் குழுவில் இருக்கக்கூடிய அத்தனை சகோதரிகளுக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, சகோதரி விமலா ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். குழு மூலமாக அவர் இன்றைக்கு சொந்தமாக ஒரு ஜெராக்ஸ் கடை நடத்திக்கொண்டு வருகிறார்கள். சில வருடங்களுக்கு முன்பு, சகோதரி விமலா அவர்கள் தனக்கு யாராவது வேலை கொடுக்க மாட்டார்களா, தன்னுடைய வருமானத்துக்கு யாராவது வழி செய்ய மாட்டார்களா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இன்றைக்கு அவர் இரண்டு சகோதரிகளுக்கு வேலை கொடுத்திருக்கிறார். இதுதான் மகளிர் சுயஉதவிக் குழுவின் வெற்றி. அவர்களுக்கு என் வாழ்த்துகள்.

### திராவிட மாடல் அரசு

இன்றைக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள்தான் பல ஏழை, எளிய குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்றி வருகிறது. குழுவில் இருக்கக்கூடிய மகளிர் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மகளிரையும் முன்னேற்றுகின்ற அரசாக, நம் திராவிட மாடல் அரசு சார்பாக முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

நம் முதலமைச்சர் அவர்கள் மிக முக்கியமான திட்டங்கள் அனைத்தையும் மகளிரை மையப்படுத்தியே செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். உதாரணத்துக்கு, முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு ஐந்து திட்டங்களில் கையெழுத்திட்டார். அதில் மகளிர் விடியல் பயணம் திட்டத்துக்குத்தான் முதல் கையெழுத்திட்டார் முதலமைச்சர். இன்றைக்கு மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் மூலமாக இந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும் 770 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள். அதுதான் இந்த திட்டத்தின் வெற்றி.

அதேபோல, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 22 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். வெறும் வயிற்றோடு சென்று கொண்டிருந்த குழந்தைகளுக்கு, இன்றைக்கு பள்ளிக்கூடத்துக்குச் சென்றால் முதலில் தரமான காலை உணவு, அதன் பிறகு தரமான கல்வி கிடைக்கிறது. என் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள, நம் முதலமைச்சர் இருக்கிறார், திராவிட மாடல் அரசு இருக்கிறது என்று பெற்றோர்கள் மகிழ்ச்சியோடு பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறார்கள்.

### கல்வி ஊக்கத்தொகை

குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்குச் சென்றால் மட்டும் போதாது. கல்லூரிக்குச் சென்று உயர் கல்வி படிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளியில் படித்து, உயர்கல்வி படிக்கின்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் அவர்களின் வங்கிக் கணக்கில் மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையாக வழங்குகிறார், நம் முதலமைச்சர் அவர்கள்.

இந்த முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை, சமீபத்தில் முதலமைச்சர் விரிவாக்கம் செய்தார். அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளுக்கும் சேர்த்து அந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்தார். பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சர் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள சென்னைக்கு வந்தார். ``தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே! இந்தத் திட்டம் மிகமிக சிறப்பான திட்டம். இந்தத் திட்டத்தை விரைவில், நான் பஞ்சாப் மாநிலத்தில் அறிமுகப்படுத்த போகிறேன்” என்று அவர் பாராட்டிப் பேசினார். அதுதான் அந்தத் திட்டத்தின் வெற்றி.

நான் அந்த நிகழ்ச்சியில் வரவேற்புரை வழங்கினேன். அப்போது காலை உணவுத் திட்டத்தில் தாய் உள்ளத்துடன் சமைக்கின்ற நம் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் சகோதரிகள் என்று பெருமையாகக் குறிப்பிட்டேன்.

அதேபோல, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, செப்டம்பர் 15–ஆம தேதியுடன் இரண்டு வருடம் ஆகிவிட்டது. கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகையாக நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார். இந்த மாதத்திற்கான உரிமைத்தொகை, இன்றைக்கு உங்களின் வங்கி கணக்குக்கு வந்திருக்கும்.

சில இடங்களில் எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று குறைகள் இருந்தன. சமீபத்தில், `உங்களுடன் ஸ்டாலின்' என்ற முகாம் நடத்தினோம். அந்த முகாமில் கிட்டத்தட்ட 40 சதவிகித மனுக்கள், மகளிர் உரிமைத்தொகை வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் வைத்திருந்தார்கள்.

### மகளிர் முன்னேற்றம்

நம் முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தில் தற்போது சில விதிமுறைகளை எல்லாம் தளர்த்தி இருக்கிறார்கள். நிச்சயம் ஓரிரு மாதங்களில் தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். எனவே மகளிர் முன்னேற்றம், மாணவர்கள் முன்னேற்றம், தொழில் முன்னேற்றம் என்று இப்படி ஒவ்வொரு துறைக்கும் பார்த்துப் பார்த்து நம் முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.

இதுவரை மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ஒரு லட்சம் கோடிக்கும் அதிகமான வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கி இருக்கிறோம். இதையெல்லாம் நம் முதலமைச்சர் உங்களுக்கு கொடுக்கின்ற கடன் தொகையாக பார்க்கவில்லை, உங்கள் உழைப்பின் மீது வைத்த நம்பிக்கை தொகையாகத்தான் பார்க்கிறார்கள்.

இது பொறுக்காமல் சில பேர், பல விமர்சனங்கள் செய்கிறார்கள். சமீப காலமாக ஒவ்வொருவரும், ஒவ்வொரு நிற பேருந்துகளை எடுத்துச் செல்கிறார்கள். ஒருவர் பச்சை நிறப் பேருந்து, இன்னொருவர் மஞ்சள் நிற பேருந்து. ஆனால், கடைசியாக எல்லாவற்றையும் பின் தள்ளி வெற்றிபெறப் போவது மகளிர் நீங்கள் பயன்படுத்துகிற முதலமைச்சரின் பிங்க் நிற பேருந்துதான்.

உங்களுக்காக உழைப்பதற்கு நம் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் தயாராக இருக்கிறார்கள். திராவிட மாடல் அரசின் சாதனைகள் தொடர 2026–லும் நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து அரசை அமைப்பதற்கு, வந்திருக்கின்ற மகளிர் அனைவரும் உங்களின் ஆதரவைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த விழாவை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்ட அமைச்சர் அண்ணன் இராஜேந்திரன் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் வங்கிக் கடன் இணைப்பு மற்றும் அடையாள அட்டைகள் பெற்றுள்ள அத்தனை சகோதரிகளுக்கும் மீண்டும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

இவ்விழாவில் அமைச்சர் ஆர். இராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வகணபதி, பிரகாஷ், மாநகராட்சி மேயர் இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் அருள், சதாசிவம், துணை மேயர் சாரதா தேவி, ஊரக வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண் இயக்குநர் சஜீவனா ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பிருந்தாதேவி ஐ.ஏ.எஸ்., கூடுதல் ஆட்சியர் பொன்மணி ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார், திட்ட இயக்குநர் வாணி ஈஸ்வரி, கருப்பூர் பேரூராட்சித் தலைவர் சுலோசனா சிலம்பரசன், அன்னை தெரசா மகளிர் சுய உதவி குழுவைச் சேர்ந்த கவிதா, செல்வ விநாயகர் குழுவைச் சேர்ந்த சரஸ்வதி உள்பட பலரும் கலந்துகொண்டனர்.